பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

20 04 2024 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் வரும் 26-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சிடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. பிஜேபி அளித்த வாக்குறுதியின்படி அனைத்து மாநிலங்களிலும் எயிம்ஸ் மருத்துவமனைகள் இன்னும் நிறுவப்படவில்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு சித்தராமையா தெரிவித்துள்ளார்.

4. மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் மொத்தம் 69 புள்ளி நான்கு ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் மதிப்பீடு செய்துள்ளது.

5. **Shenzhen** சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியா – நெதர்லாந்து இணை பட்டம் வென்றது.

<u>இனி விரிவான செய்திகள் --</u>

**<<<<<<<<>>>>>**

மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தை தொடங்கியுள்ளன.

கர்நாடகா, கேரளா, குஜராத் உள்ளிட்ட 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளில் வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, கர்நாடக மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக 14 தொகுதிகளில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று மாலை வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு வளர்ச்சியடைந்த பாரதத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்ததாக கூறினார்.

ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் உயர்கல்வியில் சேர்ந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் இப்பிரிவுகளை சேர்ந்த மக்கள் மத்திய அரசின் நலத்திட்டங்களால் அதிகம் பயனடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறை விரிவாக்கம் செய்யப்பட்டதால், விவசாயிகள் பயன்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு தொலைநோக்குப் பார்வையும் இன்றி, ஐ என் டி ஐ கூட்டணி மக்களவைத் தேர்தலை சந்திப்பதாகவும் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

இதனிடையே, கர்நாடக முதலமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திரு சித்தராமையா, வெளியிட்டுள்ள அறிக்கையில், பிஜேபி கொண்டுவந்த சூரிய மின்சக்தித்திட்டம் ஏழை எளிய மக்களுக்கு சுமையை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

அதிக அளவு செலவு செய்து சோலார் பேனல்களை வாங்க இயலாத ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தின் பயன்களை பெற முடிவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிஜேபி ஏற்கனவே அளித்த வாக்குறுதியின்படி, அனைத்து மாநிலங்களிலும் எயிம்ஸ் மருத்துவமனைகளை நிறுவவில்லை என்றும் திரு சித்தராமையா குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில், மூன்றாம் கட்டமாக அடுத்த மாதம் 7ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்தது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது. வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

<<<<<<<>>>>>

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

அகமதாபாதில் இன்று குஜராத் மாநில தொழில் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், இரண்டு இலக்க பணவீக்கத்திலிருந்து மீண்டு, விரைவான வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கு கடந்த பத்தாண்டுகளில் சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஜவுளி, ரசாயனம், செமிகண்டெக்டர, ஏரோஸ்பேஸ் உள்ளிட்ட துறைகளில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு குஜராத் மாநில தொழில் துறையினர் சிறப்பாக பங்காற்றியிருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<<>>>>>

ஒடிசாவின் **Jhar Suguda** மாவட்டத்தில் மகாநதி ஆற்றில் படகு கவிழ்ந்து, ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட தேடுதல் பணியின்போது, 7 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணாமல் போன ஒரு பெண்ணை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நேற்று 54 பயணிகளுடன் லக்கான்பூர் பகுதியில் இந்தப் படகு ஆற்றில் சென்று கொண்டிருந்த போது விபத்து நேரிட்டது.

இதில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் அண்டை மாநிலமான சத்திஷ்கரை சேர்ந்தவர்கள்.

படகில் பயணம் செய்த எஞ்சிய 46 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

ஒடிஷா மாநிலம் மகாநதியில் ஏற்பட்ட படகு விபத்து சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர் ஆகியோர் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், இந்த சம்பவத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு குறித்து வேதனை தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டும் என தாம் பிரார்த்தனை செய்வதாகவும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இந்தத் துயர சம்பவம் தம்மை ஆழ்ந்த வருத்தத்திற்கு உள்ளாக்கி இருப்பதாக தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டும் என இறைவனிடம் பிரார்த்தனை செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் மொத்தம் 69 புள்ளி நான்கு ஆறு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் மதிப்பீடு செய்துள்ளது.

அதிகபட்சமாக தருமபுரியில் 89 புள்ளி நான்கு எட்டு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இரண்டாவதாக, கள்ளக்குறிச்சியில் 79 புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

குறைந்தபட்சமாக மத்திய சென்னையில் 53 புள்ளி ஒன்பது ஒன்று சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மதுரை மக்களவைத் தொகுதியில் வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் மதுரை மருத்துவக்கல்லூரியில் பலத்த கண்காணிப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா — 40 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>

அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய குற்றவியல் நடைமுறைச்சட்டங்கள் மாற்றத்தை கொண்டுவந்து, நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், நடைமுறையில் இருந்த குற்றவியல் நீதி கட்டமைப்பை முற்றிலுமாக சீரமைக்கும் வகையில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களும் அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப நீதி கட்டமைப்பை இந்த சட்டங்கள் மாற்றியமைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனை பெற்று தருவதற்கு வழி காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறப்பான இந்த சட்டங்களுக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் தலைமை நீதிபதி திரு சந்திரசூட் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

அந்நிய செலாவணி ஆன் லைன் வர்த்தக முறைகேடு தொடர்பாக, அமலாக்கப்பிரிவினர் மும்பை, சென்னை, கொல்கத்தா, தில்லி ஆகிய இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் இரண்டு கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பிலான வங்கி முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமலாக்கத்துறை இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைகேடு தொடர்பான ஆவணங்கள் மற்றும் மின்னணு கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>

மாலத்தீவில் நாளை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்நாட்டின் எட்டு முக்கிய அரசியல் கட்சிகள் இந்த தேர்தலில் களம் காண்கின்றன.

மொத்தம் உள்ள 93 தொகுதிகளில் 368 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

அதிபர் டாக்டர் மிசோ விடுத்துள்ள செய்தியில், வலுவான, பெரும்பான்மையான அரசை கொண்டுவருவதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாலத்தீவு அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியம் என்பதை அந்நாட்டு அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது.

<<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

**Shenzhen** சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Prarthana Thombare -** நெதர்லாந்தின் **Arianne Heartono** இணை பட்டம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், இந்த இணை, 6-3, 6-2 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Madelaind Brooks -** ஹாங்காங்கின் **Eudice Chon** இணையை வென்றது.

----------------

மெக்சிகோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rithvik - Niki kaliyanda** இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - மெக்சிகோவின் **Hans Verdugo** இணையை வென்றது.

-----------

பாரிஸ் ஒலிம்பிக் தகுதிச்சுற்றுக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Vinesh Phogat, Anshu Malik, Reetika, Mansi** ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**Bishkek –**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இன்று நடைபெற்ற மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் **Vinesh Phogat –** கம்போடியாவின் **Smanang Dit** –ஐ வென்றார்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் **Reetika -** சீனாவின் **Juang Wang**-ஐ வென்றார்.

57 கிலோ எடைப்பிரிவில், **Anshu Malik -** கிர்கிஸ்தானின் **Kalmira**-வை வென்றார்.

62 கிலோ எடைப்பிரிவில் **Mansi –** கஜகஸ்தானின் **Irina** –வை வென்றார்.

-------------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில். ஹைதராபாத் இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<<END>>>>>**